REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 28உ திங்கள் (14—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 29உ செவ்வாய் (15—11—55) [இதழ் 130

நகர்ப்புற பஸ் போக்குவரத்து தேசீயமயமாக்க சர்க்கார் திட்டம்?

சென்னை, நவ. 13—

உள்நாட்டில் சில நகர்ப்புறப் பகுதிகளில் பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்குவது குறித்த திட்டம் ஒன்றை சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிய வருகிறது.

சென்னை நகரத்தில் சர்க்கார் பஸ் போக்குவரத்து வெற்றிகரமாக நடைபெற்று வருவது உற்சாகமூட்டக்கூடியதாயிருப்பினும், நகரத்தில் ஓடுவதற்கே புதிய பஸ்கள் கிடைக்காமலிருப்பதால், சர்க்கார் இத்திட்டம் பற்றி இன்னும் இறுதியான முடிவு எடுக்கவில்லையாம்.

பண்டித நேருவின் சரித்திரப்புரட்டு

தென்னாட்டவருக்கு வேலை தர டில்லி அதிகாரிகள் மறுப்பு?

முத்தையா செட்டியார் கண்டனம்

சென்னை, நவ. 13—

தென்னாட்டவருக்கு வேலைதருவதற்கு மறுக்கும் டெல்லி அதிகாரிகள் போக்கிற்கு, ராஜா சர் எம். ஏ. முத்தையாசெட்டியார் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

"டில்லியில் உள்ள வேலை தேடித் தரும் நிறுவனத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களைத் தவிர இதரருக்கு வேலை தர மறுக்கும் கொள்கையை, சமீபகாலமாக டில்லி அதிகாரிகள் பின்பற்றி வருவது தனக்கு மிகுந்த கவலையைத் தருவதாயிருக்கிறது,"

என்று, அவர் லயோலா கல்லூரி மாணவர்களிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியாவின் இதர பாகங்களிலிருப்போரைப் பேட்டிக்கு அழைத்தால் போக்குவரத்துச் செலவு அதிகமாகும் என்ற சாக்குக் கூறிக்கொண்டு, அதிகாரிகள், டில்லியிலிருப்போரையே உத்தியோகத்திற்கு அழைக்கின்றனர்; டில்லி அல்லாத இதர இடங்களில் வேலைக்கு ஆள் பொறுக்கப் பேட்டிகளை ஏன் நடத்தக் கூடாது என்பதற்குக் காரணம் தெரியவில்லை. சென்னை சர்க்கார் இந்த முக்கியமான விஷயம் குறித்து உடனே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மச்குந்த் தொழிலாளர் வேலை நிறுத்தம்?

ஆட்குறைப்பு கூடாதெனக் கோரிக்கை

கட்டாக், நவ. 14—

வரும் நவம்பர் 15-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக மச்குந்த் நீர்ப்பாசன, மின்சாரத் தொழிலாளர்களின் சங்கத்தவர், நிர்வாகிகளுக்கு முன்னறிவிப்புத் தந்திருக்கின்றனராம்.

'ஆட்குறைப்பு' என்று கூறி, வேலையிலிருந்து நீக்கப்பட்ட 250 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தருவதுடன், அவர்கள் வேலையில்லாதிருந்த காலத்திற்குச் சம்பளம் தரவேண்டும் என்றும் தொழிற் சங்கம் கோருகிறது.

'திட்டத்தில் போதுமான வேலை வாய்ப்புக்கள் இருக்கும் போது, ஆட்குறைப்பு செய்வது கூடாது; ஆட்குறைப்புச் செய்யும் போது, தொழிலாளர்களுக்கு 10 நாள் சம்பளம் தரவேண்டும்,' என்றும், அந்தச் சங்கம் கோரியிருக்கிறது.

தலையா? பூவா?

எல்லைத் தகராறுகளைத் தீர்க்க விநோபா காணும் வழி

இராமச்சந்திரபுரம் (கி. கோதாவரி) நவ. 12—

"பெல்லாரி, மான்பூம் மாவட்டம் போன்ற எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்குமாறு என்னிடம் கேட்டால், நான் காசு ஒன்றைச் சுண்டி, 'தலையா பூவா?' என்று பார்த்துத்தீர்ப்பு வழங்குவேன்," என்று ஆச்சாரியா விநோபாபாவே குறிப்பிட்டிருக்கிறார்.

"பெல்லாரியோ, மான்பூம் மாவட்டத்தின் ஒரு பகுதியோ, இடம் பெயர்ந்து, இந்தியாவை விட்டு எங்கும் போய்விடமாட்டாது; பெல்லாரி ஆந்திராவிலா, கர்நாடகத்திலா என்பது, அத்தனை முக்கியமான ஒன்றல்ல; இதேபோலத்தான் மான்பூம் மாவட்டத்தின் பகுதியும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட

தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தாமோதர்நதிப் பள்ளத்தாக்குத் திட்டத் தொழிலாளர்கள் இன்று இரண்டாம் நாளாக திட்ட நிறுவனத் தலைவரான பி. எஸ். ராஜு என்பாரின் அறைக்கு முன் கூடி, 'பூஜா விழா'விற்குத் தரப்பட்ட முன்பணத்தைத் திருப்பித் தருவது பற்றிய சிக்கல் ஒன்றை ஒட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

தொழிலாளர்களது கோரிக்கை, முடிந்த சீக்கிரம், நிறுவனத்தின் முன் வைக்கப்படும் என்று தலைவர் உறுதி கூறியபின், அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றிருக்கின்றனர்.

அவ்வளவுதானே!

"ஜூலை மாதத்துடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களில் 7 முஸ்லிம்கள்தான் 'வெளியேற்ற சர்டிபிகேட்' பெற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்கள்; ஆனால், அதே காலத்தில் பாகிஸ்தானிலிருந்து 1,12,040 இந்துக்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள்," என்று செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

மாநில மாநாடு

★

மாநில மாநாட்டை மிகச் சிறந்த முறையில் நடத்துவதற்கேற்ற பரந்த இடத்தைத் தேடும் முயற்சி இன்னமும் சரிவர வெற்றி தரவில்லை.

திருச்சியில் அரசாங்கத்தைச் சார்ந்தனவாகவும், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றைச் சார்ந்தனவாகவும் இருக்கும் பரந்தவெளிகளில் ஏதேனும் ஒன்றில் நடத்தலாம் என்றாலோ, திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு என்றவுடனே சாக்குப்போக்குச் சொல்லி அனுமதி மறுக்கப்படுகின்றது.

சென்ற திங்களில் தோழர் அண்ணாதுரை அவர்கள் வரவேற்புக் குழுவினருடன் திருச்சியின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு இரண்டொரு இடங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் அனுமதி பெறும்படி வரவேற்புக் குழுவினரிடம் சொல்லிவிட்டு வந்துள்ளார்கள். இத்திங்களில் இடம் பற்றிய முடிவு செய்ய பொதுச்செயலாளர் அவர்கள் திருச்சி செல்ல இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கிடையே டிசம்பர் திங்களில் மாநில மாநாடு நடத்துவது என்பது இயலாததொன்றாக இருக்கிறது. சனவரித் திங்கள் முதல் பகுதியில் நடத்த வேண்டாம் என்று வியாபாரிகளும், இறுதிப் பகுதியில் வேண்டாம் என்று விவசாயிகளும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இடைப் பகுதியில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெறவிருக்கின்றன. தங்கள் தேர்வுக் காலத்திற்குப் பிறகே மாநாட்டை வைத்துக்கொள்ள வேண்டும் என்று மாணவர்கள் பலரும் கேட்டுக்கொண்டுள்ளனர். எல்லோருடைய நலன்களையும் சீர்தூக்கிப் பார்த்து மாநாட்டிற்கு நாள் குறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. டிசம்பர் திங்களில் கூடும் பொதுக் குழுக் கூட்டத்தில் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படலாம்.

'அறிவகம்' 14-11-'55 } —தி.மு.க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிடர் தனி இனத்தவர் என்பது தவறானதாம்!

வேறுபாடுகள் உண்டாம்; ஆனால் தனித் தனியானவர் என்ற எண்ணம் தீயதாம்!

★

அமிர்தசரஸ், நவ. 11—

'திராவிடர் தனி இனத்தவர்; அவர்கள் இந்தோ-ஆரிய இனத்தவரான வடநாட்டவருக்கு அடிமைப்படுத்தப்பட்டிருப்பது அநீதி; எனவே, திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற முழக்கம் கேட்டு கலக்கமுற்றிருக்கும் வடநாட்டு ஆதிபத்தியவாதிகள், இதுகுறித்துப் பேசுவதே தங்கள் 'உயர்ந்த நிலை'க்கு இழுக்கு என்று எண்ணிக்கொண்டிருந்த போக்கை விடுத்து, இப்போதுதான் சிறுகச் சிறுக திராவிடரைப் பற்றிப் பேச முற்பட்டிருக்கின்றனர் என்பதைத் தோழர்கள் அறிவர்.

'இந்தியாவை இனியும் துண்டாட அனுமதிக்கமாட்டேன்' என்று எதேச்சாதிகாரமாக அண்மையில் தமிழ் நாடு வந்திருந்த இந்தியப் பிரதமர் நேரு பேசினார் அல்லவா? இப்போது அதைத் தொடர்ந்து வடநாட்டில்—பஞ்சாபில் திராவிடரைக் குறித்துப் பேசியிருக்கிறார்.

"இந்தியாவில் பல்வகை வேறுபாடுகள், பிரிவுகள் இருக்கின்றன. பஞ்சாபியருக்கும், சென்னை வாசிகளுக்கும் (திராவிடருக்கும்) ஒன்றாயில்லாத பல விஷயங்கள் இருக்கின்றன. இந்தப் பல்வகை முகங்கள் இருக்கத்தான் வேண்டும்; ஆனால், 'பஞ்சாபும், சென்னையும் தனித் தனியானவை; வேறுபட்டவை; இரண்டு வேறு பகுதிகள்'—என்ற எண்ணம், தீயதாகும்.

"பஞ்சாபும், சென்னையும் வேறு வேறானவை என்று எண்ணுவது முழுவதும் தவறானதாகும். இந்த எண்ணம், எல்லா மக்களிடையேயும் உறவு உண்டுபண்ணுவதற்கு எதிரிடையானது என்பதால், இந்த எண்ணத்தை எதிர்த்தாகவேண்டும்.

"நிலப் படத்தில் மட்டும் இந்தியாவின் ஒற்றுமை இருக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. எல்லா மக்களின் இதயபூர்வமான ஒற்றுமை வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,"

என்று, பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாடு

19—11—55-ல் சென்னையில் நடைபெறும்

மதியழகன் தலைமை தாங்குவார்

மாநாட்டு வரவேற்புக் குழு முடிவுகள்

சென்னை, நவ. 14—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டின் வரவேற்புக் குழு நேற்று இராயபுரம் 'அறிவகத்'தில் காலை 10-30 மணிக்குத் துவங்கி மாலை 2-30 மணி வரை நடைபெற்றது. கூட்டத்திற்கு அண்ணாமலை பல்கலைக் கழக திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் இரா. பொன்னுராசு பி. எஸ். சி., தலைமை தாங்கினார்.

சட்டக் கல்லூரியிலிருந்து தோழர்கள் டி. ஏ. எஸ். பாலன் பி. ஏ. பி. எல்., கி. வ ஞான சம்பந்தன் பி. ஏ., பொ. சுப்பையா பி. ஏ., (ஆனர்ஸ்), மாறன் பி. ஏ., (ஆனர்ஸ்), வி. சிவப்பிரகாசம் பி. ஏ., பா. மாணிக்கவாசகம் பி. ஏ., இரா. சோமசுந்தரம் பி. ஏ., ப. மோகாதன் பி. ஏ., இரா. நடராசன் பி. எஸ். சி., டி. கே. பொன்னுவேலு பி. ஏ., குரு. மாணிக்கம் பி.ஏ., ஆகியோரும், பச்சையப்பன் கல்லூரியிலிருந்து தோழர்கள் தொ. பாண்டியன் எம். ஏ., உ. பில்லப்பன், கே. ஏ. கிருஷ்ணசாமி, சு. ஆறுமுகம், சு. ப. தியாகராசன், டி. கே. இராஜாபாதர், கே. என். இராமச்சந்திரன், எம். மாணிக்கம், என். சி. நாராயணசாமி, என். கே. பெரியசாமி, எஸ். பி. வேல், ஐ. சி. பாலசுந்தரம் ஆகியோரும், லயோலா கல்லூரியிலிருந்து தோழர்கள் மெய்யன்பன், வெ. சரவணன், எல். லெனின் ஆகியோரும், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்து தோழர்கள் இரா. பொன்னுராசு,

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14-11-'55 திங்கள்

இந்தி ஆதிக்கம்

டில்லி ஆட்சியாளர்கள்—வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள்—இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் இந்தி மொழியைத் திணித்து, இன்று ஆங்கிலம் வீற்றுள்ள இடங்களில் எல்லாம்—துறைகளில் எல்லாம் இந்தியை அமர்த்தினல்தான், ஆங்கிலேயனைப்போல இந்தியாவை ஒரே குடையின் கீழ் ஆள முடியும் என்ற ஏகாதிபத்திய நோக்குடன், அவசர அவசரமாக, நாள்தோறும் வளர்ந்துவரும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இந்தி மொழியைத் திணித்து வருவது குறித்து நாம் அவ்வப்போது இங்கு சுட்டிக்காட்டி வருகிறோம்.

'இந்தியை எவர் மீதும் கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்' என்று பேசுகிற பண்டித நேருவைப் போன்ற ஏகாதிபத்திய முன்னோடிகள். 'இந்தி மொழியை எவரும் எதிர்க்கக் கூடாது; அது இந்தியாவின் தேசிய மொழியாகும்; துவக்கப் பள்ளி முதல் கல்லூரி வரையிலும் போதனா மொழியாகவும், அங்காடி முதல் அரசாங்க அலுவல்கள்வரை வழங்கும் நிர்வாக மொழியாகவும் இந்தி மொழிதான் இருக்க வேண்டும்' என்று முன்ஷி போன்ற தமது சகாக்களில் சிலர் பேசி வருவதைக் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுவது, அவர்களை அப்படிப் பேசத் தூண்டும் பெரிய மனிதர்களும் நேரு போன்றோர்தான் என்று எண்ணத் தோன்றுகிறது.

'இந்தி மொழி இந்தியப் பேரரசின் அலுவல் மொழியாக மட்டும் இருக்கும்—அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி; 15 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, இந்தியை எப்படி நிர்வாகக் காரியங்களுக்கு உபயோகிப்பது என்பதைக் கண்டறிய குழு ஒன்று நியமித்திருக்கிறோம்,' என்று வடநாட்டவர் கூறுகின்றனர்.

பதினைந்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு இந்தியில் நிர்வாகம நடைபெறலாம் என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், அதே அரசியல் சட்டத்தில், அதற்குப் பிறகும் குறிப்பிட்ட சில காரியங்களுக்கு ஆங்கிலத்தை உபயோகித்துக் கொள்ளவும் இடமிருக்கிறது—என்று கூறி, 'எனவே, இந்தியை ஏற்பதற்கான காலவரையறையை நீடிக்குமாறு கோரத் தேவை இல்லை' என்பதாக, வடநாட்டுத் தலைவர்களின் தென்னாட்டுத் 'தொண்டர்'கள் கூறுகின்றனர்.

ஆனால், உண்மை நிலை என்ன?

கடந்த சட்டசபைக் கூட்டத்தில், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, 'இந்தியப் பேரரசு, அரசியல் சட்டத்தை மதித்து நடக்கிறதா?'—என்பதே சந்தேகத்திற்குரியதாயிருக்கிறது.

'பதினைந்து ஆண்டுக்காலத்திற்குப் பிறகுதான் இந்தியில் நிர்வாகம் நடைபெறலாம்' என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

'அதற்கிடையில், இந்தியை நிர்வாகத் துறையில் உபயோகிக்க எண்ணினல், இந்தியுடன் சேர்ந்து ஆங்கிலமும் உபயோகிக்கப்பட வேண்டும்,' என்றும் அரசியல் சட்டத்திலிருக்கிறது. ஆனல் இந்தியப் பேரரசினர், ஆங்கில வாசகங்கள் இன்றி இந்தி மொழி மட்டுமே கொண்ட அஞ்சல் அட்டைகள், பணம் அனுப்பும் நமூனக்கள் முதலியன எல்லாம் வெளியிட்டுவருகின்றனர். 'இது அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டதல்லவா?' — என்று, டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் இடித்துரைத்திருந்தார். அது குறித்து, இதுவரையில் இந்தியப் பேரரசில் பொறுப்புடையவர்களோ, அல்லது தொடர்புடைய இலாகாவோ தங்கள் தவறை உணர்ந்து திருந்தியதாகக்காணவில்லை. அது மட்டுமல்ல; அவர்களது அரசியல் சட்டத்தை மதிக்காத போக்கைச் சுட்டிக் காட்டியதைக் கூட அவர்கள் கவனித்ததாகக் காணோம். மாருக, தங்கள் போக்கிற்குக் காட்டப்பட்ட எதிர்ப்பை துச்சமென மதித்து தொடர்ந்து அந்தப் போக்கிலேயே செல்ல முற்பட்டிருக்கின்றனர்.

இரயில் நிலையங்களில், இனி, முழுவதுமாக ஆங்கிலச் சொற்களுக்குப் பதில் இந்திச் சொற்களே உபயோகிக்கப்படுமாம்.

அஞ்சல் இலாகா மேற்கொண்ட வழியை, இரயில்வே இலாகாவும் வேகமாகப் பின்பற்றுகிறது. இந்த இலாகாக்களின் அதிபர்கள்—டில்லி ஆட்சியாளர்கள்—வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகள்தான் பசப்புகின்றனர்—'இந்தி திணிக்கப்படவில்லை' என்று!

அஞ்சல், இரயில் இலாகாவினரின் போக்கு, 'இந்தி திணிக்கப்படவில்லை' என்பதைப் பொய்ப்பிக்கவில்லையா?

கல்விபெறும் கைதிகள்

ஐதராபாத் சிறையில் 40 பேர் பரீட்சையில் தேறினர்

ஐதராபாத் நவ. 12—'ஆந்திர சர்சித் பரிஷத்' பரீட்சை எழுதிய ஐதராபாத் மத்திய சிறையில் உள்ள கைதிகள் 40 பேரும் தேறிவிட்டதாகவும் அவர்களில் ஒரு கைதி, மாநிலத்திலேயே முதல்வராகத் தேறியதாயும், மற்றும் சிலர் இரண்டாவதாகத் தேறியதாயும் கூறப்படுகிறது.

ஐதராபாத் மத்திய சிறைக் கூடத்தில், இப்போது கல்வி கற்பித்தல் மிகப் பிரபலமாகி வருவதாயும், கையெழுத்துக் கூடப் போடத் தெரியாது சிறைக்கூடத்திற்கு வருவோரில் பலர், நான்கு மாத காலத்திற்குள் ஓரளவு கல்வியறிவு பெற்று வெளியேறுவதாகவும் தெரியவருகிறது.

'மலையாளிகள் தமிழர் மீது சந்தேகம் கொள்ள வேண்டாம்'

'திரு-கொச்சி தமிழ் வட்டங்கள் பற்றி சென்னை சர்க்கார் உறுதியுடனிருக்குமா?'

கொச்சி—சித்தூர் தமிழக இணைப்பு மாநாட்டில்

என். வி. நடராசன்

"திரு-கொச்சியில் இணைக்க வைக்கப்பட்டிருக்கும் ஒன்பது தமிழ்த் தாலுகாக்கள் தமிழகத்துடன் சேரும்போது இங்கிருக்கும் மலையாள மக்கள் வெளியேற்றப்படுவார்கள் என்ற அச்சம் யாருக்கும் வேண்டாம்; அப்படி யாராவது கூறுவார்களேயானல், அதைவிட அரசியல் குருட்டுத்தனம் வேறு இருக்க முடியாது. திராவிட நாட்டுக் கூட்டாட்சி அமையும்போது தென்னாட்டிலுள்ள வடநாட்டினரை வெளியேற்றிவிட வேண்டுமென்று சொல்ல முடியுமா?—அது ஆகக்கூடிய காரியம்தானு? ஆனல், வடநாட்டினரின் பொருளாதார வேட்டைக்காடாகத் தென்னாடு இல்லாமல் உரிமையுடன் வாழும்; மற்றப் பகுதியினரும் குடிமக்களாக வாழ உரிமை அளித்துத்தான் ஆகவேண்டும்; ஆனல், அவர்களின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்; உலகின் எந்தப் பகுதியிலும் பிற பகுதி மக்கள் வாழ உரிமையுண்டு; அவ்விதமிருக்கையில் இனத்தால் ஒன்றுபட்ட கேரள மக்கள் தமிழர்கள் மீது ஐயுற வேண்டாம்; தென்னாட்டு மக்களில், குறிப்பாகத் தமிழர்கள் வந்தாருக்கு இலையும், வருவோருக்கு உலையும் வைத்துக் காப்பாற்றிய பண்புடையவர்கள்; ஆகவே, சித்தூர் வாழ் மலையாள மக்களும் இப்பிரச்சினையில் முன்னின்று பணியாற்ற வேண்டுமென்பதே தி. மு. கழகத்தின் வேண்டுகோளாகும்.

"சென்னை மாநில அமைச்சர்களும்—ஆந்திர மாநில அமைச்சர்களும் வடக்கெல்லையைக் குறித்து பேச்சுவார்த்தை நடத்தத் துவக்குகையில், ஆந்திர அமைச்சர்கள் இப்பிரச்சினைகளுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு பிரச்சினையைக் கிளப்பி, தீர்க்கப்பட வேண்டிய உண்மையான தகராறைத் தள்ளிப் போட்டுவிட்டனரல்லவா? இதிலிருந்து, சென்னை மாநில அமைச்சர்களை எவ்வளவு ஏமாந்தவர்கள் என்று கருதியிருந்தால் ஆந்திர அமைச்சர்கள் இவ்வித நையாண்டியில் இறங்கியிருப்பர் என்பதையும் உங்கள் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

"ஆந்திர அமைச்சர்களே இவ்வித ஏமாற்றுதலால் சென்னை மந்திரிகளைத் திணற வைக்கிறார்களென்றால், ஆதிக்க வெறிபோடும் டில்லி முத்தண்ணுக்கள் நமது அமைச்சர்களைப் படுத்தும் பாடு கேட்கவும் வேண்டுமோ?

"எனவே, திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் பிரச்சினையில், சென்னை அரசினர் உறுதியாக நிற்பரா என்பது சந்தேகமாகவேயிருக்கிறது. ஆனல், சென்னை சட்டசபை உறுப்பினர்களும், அதுபோன்றே எல்லா அரசியல் கட்சிகளும், பொது மக்களும் கட்டுப்பாடாக இப்பிரச்சினையில் ஆவன செய்தால், டில்லி ஆதிக்கம்—நமது அமைச்சர்களை மதித்தாலும் மதிக்காவிட்டாலும்—மக்களின் சக்தியை மதித்தே நடந்தாக வேண்டும். அதையும் அலட்சியப்படுத்தி, இந்தியப் பேரரசு அநீதி செய்யுமானல், இம்மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாக் கட்சியினரும் மற்றவர்களும் அந்த அநீதியைத் தகர்த்தெறிய ஒன்றுபட வேண்டும். அந்த உறுதியும், திட்டவட்டமான கொள்கையுமின்றி, வெறும் மாநாடு நடத்துவதால்—வேண்டுகோள் விடுப்பதால் டில்லி ஆதிக்கம் அசைந்துகொடுத்துவிடும் என்று இன்னும் எண்ணுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது மட்டுமல்ல—தமிழர்களுக்குச் செய்யும் பெருந் துரோகமும் ஆகும்"

—இவ்வாறு, 9—11—55-ல், கொழிஞ்சாம்பாறை பச்சையப்பா நகரில், திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற சித்தூர் (தி-கொ.)—சென்னை இணைப்பு மாநாட்டில் பேசுகையில் தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய இந்த நான்கு தாலுகாக்கள் தமிழகத்துடன் சேரவேண்டிய விளக்கத்தையும், அதற்குள்ள உரிமையையும் திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதை அனைவரும் அறிவர். அது மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டுக் கூட்டாட்சியை நிறுவ எந்த அளவுக்கு உறுதிகொண்டிருக்கிறதோ, அதுபோன்றே திராவிடத்திலுள்ள எந்த மொழி வழிப் பகுதியினரும் பிறரின் உரிமையைப் பறிக்க செய்யப்படும் அநீதிகளைத் தகர்த்தெறியும் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்கள் அனைத்தும் மொழி வழிப்படி அமையப் பெற்று, அம்மாநிலங்கள் அனைத்தும் சுதந்திரமாகவும், ஒன்றுக்கொன்று அடக்கி ஆளாத—அன்புடை நடவடிக்கைகளில் குறுக்கிடாத நேச முறையில் இயங்குதல் வேண்டும் என்பதே தி. மு. கழகத்தின் பொதுவான கொள்கையாகும்.

"இவ்வித நேர்மையான அமைப்புக்கு இந்தியப் பேரரசு சற்று அரசியல் விவேகத்துடன் ஆவன செய்ய முற்பட்டிருந்தால், மாநிலப் புது அமைப்புக் குழுவின் அறிக்கையும் முன்னுக்குப் பின் முரணாக வெளிவந்திருக்காது; அதுபோலவே அந்த அறிக்கையைக் கண்டு இந்தியத் துணைக் கண்டமெங்கும் இன்று ஏற்பட்டுள்ள கண்டனங்களும், ஒரு மொழி வழி மக்கள், பிற மொழி வழி மக்கள்மீது சீற்றம் கொள்ளவுமான நிலையும்ஏற்பட்டிருக்காது என்பதை அரசியல் யூகம் படைத்த எவரும் மனதார ஒப்புக்கொள்வர்.

"சர்தார் பணிக்கர், திரு-கொச்சியில் வாழும் தமிழர்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்—என்று நாம் நமது மனவேதனையை எடுத்துக் கூறும்போது, இத்தகு அநீதிகளுக்குக் காரணம் எது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அப்படி மறைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கோள்வதுமாகும். சர்தார் பணிக்கரின் அரசியல் வாழ்வு உள்ளிட்ட எல்லா விவரங்களையும் நன்கு உணர்ந்த நேரு பண்டிதரின் ஆட்சி, நடு நிலையிலிருந்து தீர்ப்புக் கூறவேண்டிய ஒரு பொறுப்பான பணியில் சர்தார் பணிக்கர் போன்றவர்களை ஈடுபடச் செய்திருக்கலாமா?

"ஆகவே, தென்னாட்டைப் பொறுத்தவரை, கேரள—தமிழக மக்கள் தங்களின் நட்புரிமையை மறந்து 'அரசியல் எதிரிக'ளாய் இருத்தல்வேண்டும் என்ற பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்ட இந்தியப் பேரரசின் பிற்போக்கைத் தகர்த்தெறிய நாம் முனையவேண்டும். இதனை மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும்.

"திரு-கொச்சியில் இணைக்கப்பட்டுள்ள, நாஞ்சில் பகுதியிலிருந்து சித்தூர் பகுதி வரை உள்ளவை தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதற்காகவும், அதுபோலவே, வடக்கு எல்லையிலுள்ள சித்தூர் மாவட்டத்தின் தமிழ்த் தாலுகாக்களை தமிழகத்துடன் சேர்த்தாக வேண்டும என்பதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகம், அவசியம் ஏற்பட்ட நேரங்களில் தனித்து நின்றும், பிறகட்சிகளுடன் ஒன்று சேர்ந்தும் அறப் போராட்டம் நடத்தியிருக்கிறது. இதனால், கழகத் தோழர்கள், ஆட்சிபீடத்தாரின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனர். இதனை கடந்த நான்கைந்து ஆண்டுகால அரசியல் சம்பவங்கள் இன்னும் விரிவாக எல்லோருக்கும் எடுத்துக்காட்டும்.

"எனவே, இந்தச் சித்தூர் பகுதி உள்ளிட்ட நான்கு தாலுகாக்களும் தமிழகத்துடன் சேர வேண்டும் என்ற பிரச்சினையில் தமிழர்கள் போராட்டம் நடத்தித்தான் பெறமுடியும் என்ற நிர்ப்பந்தமும், அவசியமும் ஆதிக்கவர்க்கத்தினரால் உண்டாக்கப்பட்டால், இப்பிரச்சினையில் நல்ல எண்ணம் கொண்டுள்ள மற்ற கட்சிகளுடன் சேர்ந்து பணியாற்ற தி. மு. கழகம் தயாராயிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆனல், அவ்வித நிலை ஏற்படுமாயின், இப்பகுதியிலுள்ள கேரள மக்கள் சற்று நிதானமுடன் பிரச்சினையைச் சிந்தித்து தமிழர்களுக்குப் பெருந்துணையாய் நிற்கவேண்டும்.

"திரு-கொச்சியின் முன்னாள் முதல் அமைச்சரான பட்டம் தாணு பிள்ளையின் தலைமையில் ஒரு குழு சென்று நேரு பண்டிதரைப் பேட்டி கண்டு, தமிழ்ப் பகுதிகளைப் பெற பேரம் பேசியதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

"சென்னை மாநிலத்தில் கட்டாய இந்தியை எதிர்க்கின்றனர்—திரு-கொச்சியில் கட்டாய இந்தி கொண்டுவரப்பட்டிருக்கிறது; சென்னை மாநிலத்தில் வடநாட்டை எதிர்க்கும் மனப்பான்மையும், பொது

(3-ம் பக்கம் பார்க்க)

திட்டங்கள் குறித்துத் தம்பட்டமடிப்போர் கவனிக்க!

வேலையில்லாதோர் பற்றிய புள்ளி விவரங்கள்

சென்னை, நவ. 12—

"மக்கள் தொகை ஆண்டு தோறும் சுமார் 50 இலட்சம் அதிகரிக்கிறது; தொழிலாளர் தொகை ஆண்டு தோறும் சுமார் 1,80,000 அதிகமாகிறது; எனவே எதிர்காலத்தில் தனிப்பட்டவர் துறையிலும், பொதுத் துறையிலும் சேர்ந்து ஆண்டிற்கு 1,80,000 புதிய வேலைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றாகிறது; ஏற்கனவேயுள்ள வேலையில்லாதார் தொகை வேறு இருக்கிறது.

"வேலை தேடித்தரும் நிறுவனங்களின் புள்ளிவிவரங்களின் படி, நாட்டில் படித்தவர்கள் சுமார் 2,65,000 பேர் வேலையின்றி இருக்கின்றனர்; இதில் 28,000 பேர் பட்டதாரிகள்; 771 பேர் எஞ்சினீயர்கள். எஞ்சினீயர்களில் பெரும்பாலோர் தக்க வேலையில்லாமலிருப்பவர்கள்—நல்ல வேலைகளைத் தேடுபவர்கள்,"

—என்று, வேலை தேடித்தரும் நிறுவனங்களின் தலைமை டைரக்டர் எச். தாவன்போர்ட் நிருபர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் சொன்னார்:—

"அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குறைந்த பட்சம் மாவட்டத்திற்கு ஒரு வேலை தேடித்தரும் நிறுவனம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் 123 வேலை தேடித்தரும் நிறுவனங்கள் உள்ளன. அடுத்த திட்டக் காலத்தில் இவற்றை 300 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

"இளைஞருக்கு வேலை தேடித் தருவதற்கெனத் தனி நிறுவனங்கள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை, இளைஞர்களின் வேலை வாய்ப்புகளைக் கவனிப்பதுடன், அவர்களது படிப்பு, உத்தியோகம் சம்பந்தமாகவும் சரியான வழிகாட்டும்.

"வேலைதேடித் தரும் நிறுவனங்களை மாநில சர்க்கார்களிடம் மாற்றுவது சம்மந்தமான அறிவிப்பு அடுத்த மாதத்தில் வெளியாகலாம். புதிய ஏற்பாட்டின்படி, அன்றாட நிர்வாகம் மாநில சர்க்கார்கள் வசம் ஒப்படைக்கப்படும்; ஆனால், கொள்கை விஷயங்களில் மாநில சர்க்கார்களுடன் கலந்தாலோசித்து மத்திய சர்க்காரே முடிவு செய்யும்.

"எஞ்சினீயர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் தொகை மிக மிகப் பற்றாக்குறையாக இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் பலவற்றையும் நிறைவேற்றிவைக்க ஆயிரக்கணக்கில் எஞ்சினீயர்களும், லட்சக்கணக்கில் தொழில் நுட்பச் சிப்பந்திகளும் தேவைப்படுவர்."

தெலிங்கானு தனியாக இருக்க வேண்டுமாம்

ஐதராபாத் காங்கிரஸ் தலைவர் கூற்று

"மாநிலக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுப்படி எஞ்சும் ஐதராபாத், தனி மாநிலமாக இருப்பதையே மக்கள் ஆதரிக்கின்றனர்,"

என்று ஐதராபாத் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் ஜே. வி. நரசிங்கராவ் தெரிவித்திருக்கிறார்.

"தெலிங்கானுவை ஆந்திரத்துடன் இணைத்து, 'விசால ஆந்திரம்' அமைக்க வேண்டுமென்பது காங்கிரஸ் செயற்குழுவின் சிபாரிசே தவிர, அதுவே இறுதி முடிவல்ல; எனவே, மக்கள் விருப்பத்திற்கு மாறாக, ஒரு மக்களாட்சியில் எதுவும் நிறைவேறாது என்பதை தெலிங்கானு மக்கள் உணர வேண்டுகிறேன்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திருமதி புல்கானின்: ஆங்கில ஆசிரியை!

மாஸ்கோ, நவ 11—

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் துணைவியார் திருமதி புல்கானின், மாஸ்கோ பள்ளி ஒன்றில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராயிருக்கிறார்.

கிரெம்லினில் நடைபெறும் வைபவங்களில் கலந்துகொள்ள முடியாத அளவுக்கு பள்ளி வேலைகளில் அவர் ஈடுபட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

தனது துணைவர், 'பிரதமர்' என்ற முறையில் பல அலுவல்களில் ஈடுபட்டுவிடுவதால், திருமதி புல்கானின் அவரைச் சந்திப்பதற்கு வாய்ப்புகளே மிகவும் குறையாவம்.

தோழியர் மார்கரெட் ஹிகின்ஸ் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவருக்கு கடந்த புதனன்று திருமதி புல்கானின் பேட்டி அளித்தார். திருமதி புல்கானின், மேலை நாட்டுப் பெண்ணுக்கு அளிக்கும் பேட்டி இது இரண்டாவதாகும்.

பேட்டியின்போது புல்கானினது மகளும் உடன் இருந்தார்.

மருத்துவக் கல்லூரியில் பயிலும் அவர், தனது தந்தை இந்தியா செல்லும்போது தானும் செல்ல வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்; ஆனால், இன்னும் எந்த ஏற்பாடும் அதிகாரபூர்வமாகச் செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது.

நகரசபைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரப்படும்?

மத்திய சர்க்கார் ஆந்திராவுக்குக் கடன் தருகிறது

கர்னூல், நவ. 11—

மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கும், நகர சபைகளுக்கும் கடன் வழங்குவதற்கென ஆந்திர சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ரூ. 18,20,000 ஒதுக்கித் தந்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மிகக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு வீடு கட்டித் தருவதற்காக நகரசபைகளும், மாவட்ட ஆட்சி மன்றங்களும் இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளுமாம்.

மக்கள் சபையின் அடுத்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தில், அதற்காக ஒரு மசோதா தாக்கல் செய்யப்படலாம். இதற்கிடையில், தசாம்ச முறை பற்றி மாநில சர்க்கார்களின் கருத்துக்களை மத்திய சர்க்கார் கேட்டறிவர்.

1957 ஏப்ரல் முதல் புதிய நாணயம் அமுல்

தற்காலிக முடிவுகள் பற்றிய விவரங்கள்

புதுடில்லி, நவ. 12—

1957 ஏப்ரல் முதல் புதிய தசாம்ச முறை நாணயம் நாட்டில் செலாவணிக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

ரூபாயே தொடர்ந்து மூல நாணயமாக இருந்துவரும். பின்பு—அரை ரூபாய், கால் ரூபாய், 10 பைசா, 5 பைசா, ஒரு பைசா என்ற சில்லறை நாணயங்கள் புழக்கத்துக்கு வரும்.

ரூபாயில் நூறில் ஒரு பங்கு (சதம்) 'நயா பைசா' என்றழைக்கப்படும். (தற்போது காலணு பைசா என்றழைக்கப்படுவதால் புதிய நாணயம், 'நயா பைசா' என்ற பெயர் பெறும்)

புதிய நாணயம் புழக்கத்துக்கு வந்த பின்பும் கொஞ்சகாலத்துக்கு தற்போதுள்ள நாணயங்களும் புழக்கத்தில் இருந்துவரும். இவை அறவே திரும்பப் பெறப்பட்டு, பதிலுக்குப் புதிய நாணயங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படும் வரை இருவித நாணயங்களும் புழங்கும்.

இவ்வித இடைக்காலத்தில் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு, நாணய மாற்று அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு, நாடு முழுவதிலும் விநியோகிக்கப்படும்.

பக்துனிஸ்தான் எல்லையில் இராணுவம் அதிகரிப்பு?

ஆப்கன் குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 12—

பாகிஸ்தான் சர்க்கார், பக்துனிஸ்தான் எல்லையோரத்தில் தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருவதாக ஆப்கன் சர்க்கார் குற்றம் சாட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆப்கன் சர்க்கார் ஏராளமானவர்களை பக்துன் எல்லைக்குள் அனுப்பியிருப்பதாகப் பாகிஸ்தான் வானொலி சாட்டிய குற்றச்சாட்டை ஆப்கன் சர்க்கார் மறுத்துவிட்டிருக்கிறது.

'ரஷ்யா — ஒரு ஐரோப்பிய நாடு'

'ஆசிய அரசியலில் அதற்குப் பங்கு கூடாது'

பர்மா பிரதமர் தனது பழைய அறிவிப்பைத் திருத்திக்கொள்கிறார்

ஸ்டாக்ஹோம்—

பாண்டுங்கில் நடைபெற்றது போன்ற ஆசிய நாடுகள் கூட்டு மாநாடுகளில் சோவியத் ரஷ்யா கலந்துகொள்ள வேண்டுமென்று தான் முன்பு அறிவித்ததை பர்மியப் பிரதமர் யூ-நூ இப்போது திருத்திக்கொண்டிருக்கிறார்.

துரதிருஷ்டவசமாக தான் அப்படித் தவறாகக் கூறிவிட்டதாக இதழ் ஒன்றில் அவர் எழுதியிருக்கிறாராம்.

"திருவிழாக் கோலத்தில் கூடியிருந்த கூட்டத்தில், நட்புரிமையுடன் நான் அவ்வாறு பேசிவிட்டேன்; அதற்கு உண்மையான அரசியல் முக்கியத்துவம் தர நான் விரும்பவில்லை. சோவியத் யூனியன், என்னுடைய கருத்துப்படி அத்தகு மாநாடுகளில் கலந்துகொள்ளத் தேவையில்லை—கலந்துகொள்ள அனுமதிக்கப்படக் கூடாது என்று கருதுகிறேன். சோவியத் யூனியன் ஒரு ஐரோப்பிய நாடாகும்; ஏனெனில், அதன் பிரதான நிலப்பரப்பு ஐரோப்பாவில்தான் இருக்கிறது; எனவே முழுவதும் ஆசிய நாடுகளுடைய அரசியலில், ரஷ்யா பங்கு பெற முடியாது"

என்று, அவர் அந்த இதழில் எழுதியுள்ளார்.

துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

5—11—55 சனி காலை 10-30-மணிக்கு, திருவனந்தபுரம் துரித வண்டியில் தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ராசபாளையம் வந்து சேர்ந்தார். இரயில்வே நிலயத்தில், ராசபாளையம், சத்திரப்பட்டி தி மு கழகச் செயலாளர்களும் உறுப்பினர்களும் அவருக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

அன்று மாலை 5 மணிக்கு, சமுசிகாபுரம், சங்கரபாண்டிபுரம், சத்திரப்பட்டி பஸ் நிலயம் ஆகிய இடங்களில் கழகக் கொடிகளை துணைப் பொதுச்செயலாளர் ஏற்றிவைத்தார். பின்னர் ஊர்வலம் புறப்பட்டு, கூட்டம் நடைபெறும் திடலுக்கு வந்து சேர்ந்தது. ஊர்வலத்தில் ஏராளமான கழகத் தோழர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மாலை 7 மணிக்கு, தோழர் கே. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கனகசபாபதி, சி. பி. அண்ணமலை, ஆர். கே. துரை ஆகியோர் பேசிய பின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

துணைப் பொதுச்செயலாளருக்கு கிளைக் கழகச் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன், சமுசிகாபுரம், சங்கரபாண்டிபுரம், சத்திரப்பட்டி ஆகிய தி. மு கழகக் கிளைகள் சார்பிலும், சங்கரபாண்டிபுரம் திராவிட இளைஞர்கள், நாடக மன்றத்தின் சார்பிலும் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. ராசபாளையம் பாரதிதாசன் படிப்பகத்தார் காலணுக்கள் கொண்ட மாலை அணிவித்தனர்.

* * *

ராசபாளையம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

6—11—55 காலை 11 மணிக்கு ராசபாளையம் நகர தி. மு. கழகச் செயற்குழு கூட்டம் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் முன்னிலையில் நடைபெற்றது. செயலாளர் தோழர் முத்துச்சாமி நகரக் கிளையின் நிலையை விளக்கிப் பேசினர். பின்னர் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக துணைப் பொதுச் செயலாளர், ராசபாளையம் நகர தி.மு. கழகக் கிளையின் எதிர்காலப் பணியைப் பற்றி ஆவன எடுத்துக் கூறியதற்கு உறுப்பினர்களும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

★

சுந்தரபாண்டியம்

அன்று மாலை 6-30 மணிக்கு சுந்தரபாண்டியம் தி. மு. கழகச் சார்பில் கடைவீதி அடுத்த திடலில் தோழர் க. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தவக்கத்தில் தோழர் சி.பி. அண்ணமலை பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மாநிலப் புது அமைப்புக் குழு தென்னாட்டு மக்களுக்கு விளைவித்துள்ள அநீதிகளை விளக்கியும், அதனை எதிர்த்து நமது உரிமையை அடையவேண்டிய வழிவகைகளைக் குறித்தும், திராவிட நாட்டுப் பிரிவினை பற்றிய விளக்கமும் தந்ததுடன், தி. மு. கழகம் நெசவுத் தொழிலாளர்களுக்கு ஆற்றியுள்ள பணியினையும் எடுத்துக்காட்டிப் பேசினர்.

துணைப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு சுந்தரபாண்டியம், ராமச்சந்திராபுரம், அகத்தாபட்டி, புதுப்பட்டி ஆகிய தி. மு கிளைக் கழகங்கள் சார்பிலும், சுந்தரபாண்டியம் தோழர் வை. கருப்புச்சாமி அவர்களாலும் கைத்தறித் துண்டுகளும், வேட்டிகளும் அணிவிக்கப்பட்டன.

* * *

அனைத்திந்திய கூட்டுறவு இயக்க வார விழா

அனைத்திந்திய கூட்டுறவு இயக்க வார விழாவையொட்டி, சுந்தரபாண்டியம் கூட்டுறவு சங்கங்களின் சார்பில், வானொலி திடலில், 7—11—55 மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர் ஆர். எஸ். மணி அய்யர் தலைமை வகித்தார். சமுதாய நல அபிவிருத்தி இலாகா அதிகாரியான கோபாலகிருஷ்ணன், தோழர்கள் குருசாமி, தர்மராசன், ஆர். சுப்பிரமணியம், அ. குப்புசாமி ஆகியோர் பேசினர்.

இறுதியில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்னும்பொருள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

* * *

சித்தூர் (திரு - கொச்சி)—தமிழக இணைப்பு மாநாடு

9—11—55ல், சித்தூர் (திரு-கொச்சி)-தமிழக இணைப்பு மாநாட்டில் கலந்து கொள்ள தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் 9—11—55 அதிகாலை பொள்ளாச்சி வந்து சேர்ந்தார். இரயில்வே நிலயத்திற்கு மாநாட்டின் நிர்வாகிகள் வந்திருந்து தோழர் நடராசன் அவர்களை வரவேற்று, மாநாடு நடைபெறும் பகுதியாகிய கொழிஞ்சாம்பாறைக்கு அழைத்துச் சென்றனர்.

* * *

திரு-கொச்சி சித்தூரில் தோழர்கள் சந்திப்பு

திரு-கொச்சி சித்தூர்—தமிழக இணைப்பு மாநாட்டுக்குச் சென்றிருந்த தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களை அன்று தி. மு. கழக ஆதரவாளர்களும், மாணவர்களும் சந்தித்து அங்கு தி. மு. கழகக் கிளை அமைப்பது குறித்துக் கலந்து பேசினர்.

மறைவு

பெங்களூர் சீராமபுரம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் சு. கண்ணன் அவர்களது தாயார் வள்ளியம்மாள் 9—11—55ல் இயற்கை எய்தினர்.

மலையாளிகள்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வுடைமைத் தத்துவமும் வளர்கிறது—ஆனால், திரு-கொச்சியில் அந்தக் கொள்கைக்கு இடமே அளிக்மாட்டோம்—என்றெல்லாம் பேரம் பேசுகின்றனர்!

"மலையாள மக்கள்—குறிப்பாக மாணவர்கள் பட்டம் தாணுக்களின் இந்த அநீதியை ஊன்றிக்கவனிக்க வேண்டும். அவர்களது தாய் மொழியை—மாநிலத்தின் உரிமையை அடகு வைத்து, ஆதிக்கப்பீடத்தில் அமருவதற்கு வடநாட்டு எஜமானர்களிடம் பிச்சை கேட்கின்றனர்; இதற்கு அவர்கள் ஆதரவு தர முடியுமா?

"பட்டம் தாணுக்களின் பசப்பலும், சர்தார் பணிக்கர்களின் பேராசையும் இவ்விதமிருக்க, சென்னை மாநில அமைச்சர்களோ, 'தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் வந்தால் வரட்டும்—போனல் போகட்டும்; இரண்டும் வந்தாலென்ன-போனலென்ன?'—என்று அரசியல் வேதாந்தம் பேசுகின்றனர்."

கடலூர் (என்.டி.)

'நம் நாடு' விற்பனையாளர்

இரா. பழனிசாமி,
வெற்றிலைபாக்குக் கடை,
ஓட்டல் பிருந்தாவன்,
கடலூர், புதுநகர் (என். டி.)

துங்கபத்திரா அணையிலிருந்து மைசூருக்கு நீர் பாய்ச்சுவர்!

பெல்லாரியை கர்நாடகத்துடன் இணைக்கக் கன்னடியர் போராட்டம்

பெல்லாரி, நவ. 12—

பெல்லாரி, ஹோஸ்பெட், சிறுகுப்பா வட்டங்களையும், மல்லப்புரம் துணை வட்டத்தையும் ஆந்திராவுடன் இணைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ள மாநிலக் குழுவினர், அதற்காகக் காட்டியுள்ள காரணங்கள் அபத்தமானவை என்று கூறி, கன்னடியர், அந்த வட்டங்கள் கர்நாடகத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தத் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நவம்பர் 15-ந் தேதிக்குள் 'இந்த வட்டங்கள் கர்நாடகத்துடன் தான் இருக்கும்; ஆந்திராவுடன் இணைக்கப்பட மாட்டாது' என்று, மத்திய சர்க்கார் உறுதிமொழி தராவிட்டால், நவம்பர் 16-ந் தேதி முதல் போராட்டத்தில் ஈடுபடுவது என்று 'அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்' முடிவு செய்திருக்கிறதாம்.

இந்தப் 'பரிஷத்'தைச் சேர்ந்த தொண்டர்கள், நவ. 16-ந் தேதியன்று 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபடுவராம்.

துங்கபத்திரா திட்டப் பகுதிக்குச் சென்று சிறிய வாய்க்கால்கள் வெட்டி, அணைக்கட்டிலிருந்து நீரைத் திறந்துவிட்டு, மைசூர் பகுதிக்கு வெட்டிய வாய்க்கால் மூலம் பாய்ச்சுவர் என்று கூறப்படுகிறது.

இந்தக் கிளர்ச்சியை நடத்துவதற்கு, மக்கள் சபை உறுப்பினரான சிவமூர்த்திசாமி என்பவர் முதல் 'சர்வாதிகாரி'யாக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

கலைவாணருக்கு பாராட்டு

13—11—55 காலை சென்னை மயிலை ரசிக ரஞ்சனி சபா மண்டபத்தில், தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில், திரு. ரா. பி. சேது அவர்கள் தலைமையில், நகைச்சுவை நடிகர் தோழர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தும் விழா நடைபெற்றது.

விழாவில், தோழர்கள் எம் ஜி இராமச்சந்திரன், டி. கே சண்முகம், எம் ஆர். இராதா, எம். கே. தியாகராஜ பாகவதர், கே. சாரங்கபாணி, மற்றும் பல திரைப் பட நடிகர்களும், நடிகைகளும், டி. வி. சுந்தரம், பி. சம்பந்தனார், ப ஜீவானந்தம், ம. பொ. சிவஞானம் ஆகியோரும், மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

திரு. பி. சம்பந்தனார் அவர்கள் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தினார்.

தோழர் என். எஸ் கே. அவர்கள் இதுவரை 102 திரைப் படங்களில் நடித்துள்ளதைக் குறிக்கும் வகையில் ஜூபிடர் பிக்சர்ஸ் சார்பில் ரூ. 102 பரிசாகக் கொடுக்கப்பட்டது.

தோழர் எம் ஆர். இராதா அவர்கள் 26 பொற்காசுகளை பரிசாகக் கொடுத்தார்.

தோழர் டி. கே. சண்முகம் அவர்கள் ரூ. 1001-ஐ என். எஸ் கே அவர்களுக்களித்தார்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்கும், பரிசுகளுக்கும் நன்றி தெரிவித்துத் தோழர் என். எஸ் கிருஷ்ணன் பேசுகையில், ஒரு நடிகனை இவ்விதம் பாராட்டுவதின் மூலம், நாடக, திரைப்பட நடிப்புக் கலையைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

இறுதியில், தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் தோழர் எம் ஜி இராமச்சந்திரன் நன்றி நவின்றார்.

சென்னை மாவட்ட எய்டட் ஆரம்பப்பள்ளி மானேஜர்கள் சங்கம்

16—11—55 மாலை 5 மணிக்கு சென்னை-மண்ணடி, எண் 94/95 பவழக்காரத் தெரு ராஜமன்னார் செட்டி ஆரம்பப் பாடசாலையில் மேற்படி சங்கப் பொது உறுப்பினர்களின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

பாக். துருப்புகள்—பக்தூன்கள் மோதுதல்

புதுடில்லி, நவ. 11—

பாகிஸ்தான் இராணுவத்தினர், கிளர்ந்தெழுந்துள்ள பக்தூன்களுடன் மோதிக்கொண்ட சம்பவங்கள் தெரியவந்துள்ளன.

மத்திய பக்தூனிஸ்தானில் தஹல்குர்ரம் பகுதியில் பக்தூனிய துருப்புகள் தாக்குதல் நடத்தியதாயும் அதனை ஒடுக்குவதற்குப் பாகிஸ்தான் விமானப் படையினர் முற்பட்டதாயும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் கடந்த அக்டோபர் 30-ந் தேதி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அதே நாளன்று பக்தூனிஸ்தான் துருப்புகள் பெஷாவருக்கும்—கௌஷராவிற்கும் இடையேயுள்ள இராணுவ தளம் ஒன்றில் குண்டு வீசியதாயும், அருகிலிருந்த பாலம் ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தியதாயும் கூறப்படுகிறது

மேலும் சில இடங்களில் போலீஸ் நிலையங்கள் மீது, பக்தூன் மலைவாசிகள் கடுமையான துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

கடந்த நவம்பர் 6-ந் தேதியன்று பக்தூன் துருப்புக்கள் லோர்கி என்ற இராணுவ முகாமைத் தாக்கியதாகவும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சண்டையில், பாகிஸ்தான் துருப்புகளுக்கு விமானப் படையினர் உதவியதாயும் கூறப்படுகிறது.

வேலையின்மையைப் போக்குவதற்கு திட்டம்

புதுவைக்கு ரூ. 1,20,00,000 ஒதுக்கப்பட்டுள்ளதாம்

காரைக்கால், நவ. 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதுவையில் வேலையின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, குடிசைக் கைத்தொழில்கள் உட்பட பல்வேறு கைத்தொழில்களையும் துவக்குவதற்காக ரூ. 1,20,00,000 மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறதென்று புதுவை முதலமைச்சர் கூறியுள்ளார்.

சென்னை பஸ்களில் பொய் டிக்கெட்டுகள்

தடுப்பதற்கு நடவடிக்கை

சென்னை, நவ 12—

சென்னை நகர பஸ் போக்குவரத்தில், பொய் டிக்கெட்டுகள் செலாவணியாகி, சர்க்கார் வருமானம் குறைவதாகக் கிடைத்துள்ள புகாரின் மீது, இந்த டிக்கெட்டுகளை அரசாங்க அச்சகத்தில் அச்சிடுவதற்கான திட்டம் ஒன்றைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இதற்கான விசேட இயந்திர வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்தியொன்று கூறுகிறது.

தி. மா. மு. கழக மாநில மாநாடு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பி. எஸ் ஜி. மு. கலியபெருமாள், சிந்தனைப்பித்தன், கு. பாலகிருட்டிணன் ஆகியோரும், தியாகராயர் கல்லூரியிலிருந்து தோழர் க. அறிவழகன் பி ஏ., (ஆனர்ஸ்) பி. டி -யும், ஆசிரியர் பயிற்சி கல்லூரியிலிருந்து தோழர் க. அரசுமணி பி ஏ., ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலிருந்து தோழர் ச. மா. தமிழ்ச் செல்வனும், சென்னை ஆர்ட்ஸ் கல்லூரியிலிருந்து தோழர் அன்பானந்தனும் சென்ட்ரல் பாலிடெக்னிக் சார்பில் தோழர்கள் எஸ். ருக்மாங்கதன், என். ஆர். இராதா, ந. சீனுவாசன் ஆகியோரும், எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளி சார்பில் தோழர்கள் என். கணேசன், எ. ஆதிமூலம், அ. குருமூர்த்தி, வி. ஜி. வைத்தியநாதன் ஆகியோரும், ராயபுரம் செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளியின் சார்பில் தோழர்கள் மதிவாணன், ஆடலரசு, சா. தியாகராஜன், ராஜா ஆகியோரும், நுங்கம்பாக்கம் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி சார்பில் தோழர்கள் து. தி. தயாளன், எம். ஜி. சுவாமி ஆகியோரும், புதுவை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் தமிழரசனும், திண்டுக்கல் தி. மா. முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் வணங்காமுடியும் கலந்துகொண்டனர்.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாடு அவசியம் குறித்தும், அதன் முன்னுள்ள பிரச்சினைகள் குறித்தும் விளக்கினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் தோழர்கள் மதிவாணன், ச. ஆறுமுகம், டி. பாண்டியன், க. அறிவழகன், சிந்தனைப்பித்தன், அன்பானந்தன், கே. ஏ. கிருஷ்ணசாமி, டி. கே இராஜாபாதர், உ. பில்லப்பன், மெய்யன்பன், மாறன், வணங்காமுடி, சுப்பையா, சிவப்பிரகாசம், பாலன் ஆகியோர் கலந்துகொண்டு நல்ல பல கருத்துரைகளை வழங்கினார்கள்.

கோவை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் சி. டி. தண்டபாணியும், மதுரை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் மா. பாண்டியனும், நாகர்கோயில் தோழர் வை. சுப்பிரமணியமும், கடலூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினரும் கடிதங்கள் தீட்டியிருந்தனர்.

இறுதியாகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டை வருகிற 19—11—55 சனிக்கிழமை காலை 8-30 மணி முதல் 1 மணி வரை சென்னை கோகலே மண்டபத்தில் நடத்துவதென்றும், அதற்கு வரவேற்புக் குழுத் தலைவராக சட்டக் கல்லூரி மாணவர் தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்கள் தோழர் பாலனால் முன்மொழியப்பட்டு, தோழர் ஆறுமுகம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநாட்டுச் செயலாளர்களாக பச்சையப்பன் கல்லூரித் தோழர் உ. பில்லப்பன், லயோலா கல்லூரி மாணவர் தோழர் எல் லெனின், நுங்கம்பாக்கம் உயர்நிலைப்பள்ளி மாணவர் தோழர் தயாளன் ஆகியோர் தோழர்கள் அறிவழகன், சுப்பையா, சு. ப. தியாகராசன், மெய்யன்பன், இராதாகிருஷ்ணன், எம். ஜி. சாமி ஆகியோரால் முறையே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டின் பொருளாளராகத் தோழர் மாறன் அவர்கள், தோழர் சிவப்பிரகாசத்தால் முன்மொழியப்பட்டு தோழர் ராஜாபாதரால் வழிமொழியப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநாட்டுத் தலைவராகத் தோழர் கே. ஏ. மதியழகன், தோழர் ஞானசம்பந்தத்தால் முன்மொழியப்பட்டு, தோழர் சிவப்பிரகாசத்தால் வழிமொழியப்பட்டு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநாட்டின் திறப்பாளராகத் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தோழர் பாலனால் முன்மொழியப்பட்டு, தோழர் டி பாண்டியனால் வழிமொழியப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநாட்டிற்கு சிறப்புரை ஆற்றுவதற்கு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களையும், தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களையும் அழைப்பதென்ற தீர்மானம் தோழர் மாறனால் முன்மொழியப்பட்டு, தோழர் மெய்யன்பனால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநிலமெங்குமுள்ள திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்களும், அதனிடம் அக்கறைகொண்டோர் அனைவரும் எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நல்கி மாநாட்டை வெற்றிகரமாக்கித்தர வேண்டுகோள் விடுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ந-நி)

****

திராவிட மாணவர் முன்னேற்ற கழக 2-வது மாநில மாநாடு

★

19-11-55 சனி காலை 8-30 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

★

தலைவர்: **கே. ஏ. மதியழகன்**

திறப்பாளர்: **இரா. நெடுஞ்செழியன்**

பேசுவோர்: **சி. என். அண்ணாதுரை**

என். வி. நடராசன்

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்

★

நன்கொடை: ரூ. 1, அணா 8

உ. பில்லப்பன்,
எல். லெனின்,
து. தி. தயாளன்
—செயலாளர்கள்

டி. கே. பொன்னுவேலு
—வரவேற்புக் குழுத் தலைவர்.

****

புதுவையில் வரவேற்பு பொதுக்கூட்டம்

27-11-55 மாலை 6 மணிக்கு, புதுவை, ஒதியஞ்சாலைத் திடலில், புதுவை தி. மு. கழக வட்டக் குழுச் சார்பில், தோழர் சி.என். அண்ணாதுரை அவர்கட்கும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும் வரவேற்பு அளிக்கப்படும்.

நிலக்கோட்டை வட்ட தி.மு.கழகச் செயலாளர்கட்கு

"20-11-55 பகல் 11 மணிக்கு, பட்டிவீரன்பட்டி தி.மு.கழகச் செயலாளர் தோழர் டி. என். எஸ். மீனாட்சிசுந்தரம் இல்லத்தில், நிலக்கோட்டை வட்டாரக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம், வட்டாரக் குழுவுக்குப் புது நிர்வாகிகள் தேர்தல் நடத்துவது; இப்போது நடைபெற்ற வட்டாரக் குழுவில் சேராத கிளைக் கழகங்களைச் சேர்ப்பதுபோன்ற பல பொருட்கள் குறித்துத் தீர்மானிக்கப்படும். அன்று கூட்டத்திற்கு வெளி இடங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு தோழர் டி.என்.எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள் இல்லத்தில் உணவு வசதியும், சிற்றுண்டியும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,"

என்று, நிலக்கோட்டை வட்டார தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. சாத்தான் அறிவிக்கிறார்.

'மணிமகுடம்'-நாடகம்

16-11-55 இரவு 10 மணிக்கு, மணப்பாறை ராசா தியேட்டரில், மணவை தி. மு. கழக நிதிக்காக, எஸ்.எஸ்.இராசேந்திரன் குழுவினர் நடிக்கும், தோழர் மு. கருணாநிதி எழுதிய 'மணிமகுடம்'-நாடகம் நடைபெறும்.

பக்கிங்காம் - கர்னாடிக் ஆலை தொழிலாளர்கள்

சமரச உடன்பாடு ஏற்படவில்லை

தகராறு பஞ்சாயத்துக்கு விடப்படுமா?

சென்னை, நவ. 12—

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பிரதிநிதிகளும்—நிர்வாகிகள் பிரதிநிதிகளும் இன்று தனித் தனியாகவும், சேர்ந்தும் தொழிலாளர் இலாகா அமைச்சரை சந்தித்தனர். தொழிலாளர்களின் கிராக்கிப் படி, அடிப்படைச் சம்பளம், சம்பள உயர்வு ஆகிய பிரச்சினைகளைப்பற்றி ஒரு சமரச உடன்பாட்டிற்கு வருவதற்கான எல்லா வழிவகைகளைப் பற்றி விவாதித்தனர்.

பேச்சுவார்த்தைகள் மூலமாக ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு தான் எடுத்துக்கொண்ட முயற்சி பலன் தரவில்லையென்றும், நடுநிலைமை ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் தகராறைப்பஞ்சாயத்துக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லையென்றும் இரு தரப்பினரிடமும் கூறியிருப்பதாக விவாதம் முடிந்த பின்னர் அமைச்சர் கூறியுள்ளார்.

பிரச்சினையை பஞ்சாயத்துக்கு விடுவதென்றால் நீண்டகால விசாரணையும், மிகவும் தாமதமும் ஏற்படுமென்று இரு தரப்பினருக்கும் தான் தெரிவித்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.